தி. மு. கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக, கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிநடை போடும் கழக இளைஞரணியின் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தி.மு.க. 75_ அறிவுத் திருவிழா முற்போக்கு புத்தகக் காட்சியில், அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்றனர். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. , இயக்குனர் போஸ் வெங்கட் ஆகியோர் உள்ளனர்.

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு SIR குறித்து ஆலோசனைகளை வழங்கினார். வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், இரா.சக்கரை, S.வெற்றிவேல், ஆர்.எஸ்.வாசன், உள்ளிட்ட கழகத்தினர். கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை – மக்கள் நல்வாழ்வுத் துறை – சென்னை பத்திரிகையாளர் மன்றம் – அப்போலோ மருத்துவமனை இணைந்து நடத்திய

பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தனர்!

சென்னை, நவ. 9 -

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (08.11.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறை, மருத்தும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை பத்திரிகையாளர் மன்றம் மற்றும் அப்போலோ மருத்துவமனை இணைந்து நடத்தும் பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு அவர்கள், ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து, பார்வை யிட்டார்கள். மேலும், அமைச்சர் பெருமக்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை செயலியினை (TAEI Registry 2.0) தொடங்கி வைத்து, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பத்திரிகையாளர் நல நிதியம் திட்டத்தின் கீழ் மருத்துவ நிதியுதவி 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை பத்திரிகையாளர் கே.செந்தில்நாதன் அவர்களின் மகனிடம் வழங்கினார்கள்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமில் பல்வேறு சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. பொது மருத்துவம், இருதய மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், எலும்பு முறிவு மருத்துவம், மகப்பேறு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம், இசிஜி, எக்ஸ்ரே, எக்கோ, அல்ட்ரா சவுண்ட் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மருத்துவ முகாமில் இடம் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து இதுபோன்ற பல்வேறு பணிகளை கடந்த ஆண்டுகளாக சிறப்பாக செய்து வருகின்றது.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் 202122 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், ஒரு சிறப்பு அறிவிப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச் செய்தார்கள். அதன்படி, விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 72 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமான உச்சவரம்பு இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்கள் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயனாளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்கின்ற வகையில், நிதி நிலை அறிக்கையில் அறிவித்தற்கு ஏற்ப 1414 அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்கள் சேர்க்ப்பட்டுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பேரிடர் காலத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி பல்வேறு விரிவான ஏற்பாடுகளை பல்வேறு வகைகளிலான நிதி உயர்வை தொடர்ந்து அளித்து வருகிறார்கள்.

பத்திரிகையாளர் நலனில் அக்கறை உள்ள அரசு!

பத்திரிக்கையாளர்களின் ஓய்வூதியம் 10 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் ரூபாயும், பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை 3 இலட்சத்திலிருந்து 10 இலட்சம், என பல்வேறு வசதிகளை பத்திரிகையாளர் நலன் கருதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைக்கும் பத்திரிக்கையாளர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கின்ற இந்த அரசு, பத்திரிகையாளர்களுக்கு என்று பிரத்தியேக மருத்துவ முகாமை இப்பொழுது தொடங்கி வைப்பதில் பெருமை அடைகிறது. செய்தி தொடர்பு துறை அமைச்சர் அவர்களும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஒருங்கிணைந்து இந்த முகாமை தொடங்கி வைத்து இருக்கிறோம். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சியின் மேயர் மற்றும் துணை மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பங்கேற்று இதை தொடங்கி வைப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்" என்றார்.

அமைச்சர் பெருமக்களால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை செயலி (TAEI Registry 2.0) இன்று (08.11.2025) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர மருத்துவ முன்னெடுப்பு திட்டமானது அதிகரித்து வரும் அவசர கால நோய் மற்றும் இறப்புகளை கட்டுப்படுத்தும் வண்ணம் அவசர மருத்துவ சிகிச்சை கருத்தாக்கம் மற்றும் செயலாக்கத்தில் முன்னோடி அம்சங்களை நிறைவேற்றி ஒட்டுமொத்த அரசு சுகாதார சேவைகளின் தரத்தை உறுதிசெய்து, நாட்டிலேயே தமிழகத்தை மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக மாற்றியுள்ளது.

தமிழ்நாட்டில், 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 5 சார்ந்த மருத்துவமனைகள், 31 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 41 துணை மாவட்ட மருத்துவமனைகள் என 113 நியமிக்கப்பட்ட TAEI மையங்களிலும் நவீன வசதிகளுடன் தேவையான உள்கட்டமைப்பு, உபகரணங்கள் மற்றும் மனிதவளத்துடன், பழைய அவசர சிகிச்சை பிரிவு என்னும் casualty, விரிவாக்கம் செய்யப்பட்டு அவசர மருத்துவத்துறை உருவாக்கப்பட்டிருக்கின்றது. TAEI மாரடைப்பு, தீய்க்காயம், விஷக்கடி / விஷமுறிவு, குழந்தை நல வாழ்வு மற்றும் அவசர மேலாண்மை, விபத்து மற்றும் காயங்கள், பக்கவாதம் ஆகிய 6 தூண்களை உள்ளடக்கியது,

தற்போது TAEI மையங்களில் சிகிச்சைபெறும் நோயாளிகளின் தரவுகளை சேகரிக்க, புதியதாக விபத்து மற்றும் அவசர சிகிச்சை செயலி (TAEI Registry 2.0) தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் கணினி மற்றும் தொலைபேசியில் பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு 108 அவசரகால ஊர்தி வாகனத்தில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் மற்றும் மருத்துவ மனையில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் இச்செயலியில் இணைக்கப்பட்டுள்ளது, எனவே நோயாளிகளின் தரவுகளின் அடிப்படையில் சிகிச்சை தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வழிமுறைகளின் அடிப்படையில் சிறப்பான சிகிச்சை வழங்கிடவும் வழி வகுக்கும். தற்போது 113 TAEI மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை செயலி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி. மு. விஜயலட்சுமி, திட்ட இயக்குநர் தமிழ்நாடு சுகாதார திட்டம் டாக்டர் எஸ். வினீத், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், அரசு அலுவலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ.9-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (09.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் கூட்டம் நடைபெறுகிறது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர்

கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று (நவம்பர் 09 ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிதம்பரம் பைசல் மஹாலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

அது சமயம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து 11.11.2025 அன்று கடலூர் மஞ்சகுப்பம் தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெறவிருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து திருவள்ளூரில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!

திருவள்ளூர் 09;

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற 11 ஆம் தேதி அன்று அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என்று மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர் இந்நிலையில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் ரயில் நிலைய அருகில் வருகின்ற 11ஆம் தேதி அன்று நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பணிகள் குறித்து இன்று 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணி அளவில் வல்லூரில் உள்ள

மாவட்ட கழக அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் செயலாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது இக்கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொள்கிறார்கள் என மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்

திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் பெண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளியில்

மாவட்ட அளவிலான கலைத்திருவிழா! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், நவ. 9 -

திருப்பூர் மாநகராட்சி, ஜெய்வாபாய் பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தலைமையில், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் அவர்கள் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தனியாகவும், அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்குத் தனியாகவும் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. மேலும், மாநில அளவில் கலையரசன், கலையரசி பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இவ்வாண்டிற்கான கலைத்திருவிழா போட்டிகள், மாணவ, மாணவியர்களிடையே பசுமையும்" பாரம்பரியமும் என்ற மையக்கருத்தின் அடிப்படையில் கவின்கலை, நுண்கலை, இசை, கருவி இசை, நடனம், நாடகம் ஆகிய பிரிவுகளின் கீழ் 100 போட்டிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. மாற்றுத்திறன் மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் தனியாக 15 போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், மற்ற குறைபாடுள்ள மாணவ, மாணவியர்கள் சக மாணவ, மாணவியர்களுடன் இணைந்து அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்கவும் ஊக்குவிக்கப் பட்டனர். அதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 1,413 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு "பசுமையும் பாரம்பரியமும்" என்ற மையக் கருத்தின் அடிப்படையில் கவின்கலை, நுண்கலை, இசை, கருவி இசை, நாடகம், நடனம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டதில் 1,60,740 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

1 முதல் 5ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான போட்டிகள் கரூர் மாவட்டத்தில் 25.11.2025 அன்றும், 6 முதல் 8 வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 26.11.2025 அன்றும், 9 மற்றும் 10 வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் சேலம் மாவட்டத்தில் 27.11.25 மற்றும் 28.11.25 ஆகிய நாட்களிலும், 11 மற்றும் 12 ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் 27.11.25 மற்றும் 28.11.25 ஆகிய நாட்களிலும் நடைபெறுகின்றன.

இதில் வட்டார அளவில் வெற்றி பெற்ற 3,275 மாணவ, மாணவியர்கள் மாவட்ட போட்டிகளுக்குத் கலைத்திருவிழா அளவிலான தேர்வாகியுள்ளனர். பள்ளி பாடத்திட்டத்தின் மூலம் விளையாட்டு போட்டிகள் நடத்துவதும் இதுபோன்ற கலைத் திருவிழாக்களை நடத்துவதும்

மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கும். கலை என்பது குறிப்பாக தமிழர்களுடைய பண்பாட்டிலே பின்னிப்பிணைந்த ஒன்று ஆகும். போட்டியில் கலந்து கொள்வது ஒரு வெற்றி பெற்றதற்கான ஒரு அறிகுறி மட்டுமே, மீண்டும், மீண்டும் பயிற்சி எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெற்றி என்பது நோக்கமாக இருந்தாலும் வெற்றி பெறவில்லை என்றாலும் இதுவும் கடந்து போகும் என்கிற சூழ்நிலை உருவாகிக் கொண்டு தொடர்ந்து உங்களுடைய முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் கல்வியில் மிகச்சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் வேளையில்

மாணவ, மாணவியர்களின் தனித்திறன்களை வெளிக்காட்டி மாவட்ட அளவிலும், இதனைத் தொடர்ந்து நடைபெற உள்ள மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளிலும் வெற்றி பெற்று நமது திருப்பூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட உங்கள் அனைவரையும் வெற்றி பெற வாழ்த்துகிறேன் என்று அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், திருப்பூர் மாநகராட்சி 2ம் மண்டலத்தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், 1ம் மண்டலத்தலைவர் வெ.உமா மகேஸ்வரி, மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக பொறுப்பாளர் பி.ஆர்.செந்தில் குமார், கல்வி நிலைக்குழு தலைவர் பெ.திவாகரன், நாகராஜ், சாந்தா மணி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவி திட்ட அலுவலர் இலி.அண்ணாதுரை,

பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜேசிபி எஸ். பாலுச்சாமி, மாவட்ட முன்னாள் பொருளாளர் கே.ரத்தினசாமி உள்பட கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம்,

மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, நவ.9-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கத்தில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் இன்று (09.11.2025, ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் பி.எம். செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை (SIR) கண்டித்து வரும் 11.11.25 அன்று நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து. கழக ஆக்கப்பணிகள்.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எண்.14,17,22,32, நேதாஜி நகர் பகுதி களில் வீடு வீடா சென்று SIR இன் வாக்காளர் கணக்கிட்டு படிவத்தை பாகத்தின் BLO க்களிடம் பூர்த்தி செய்து தருமாறு வழங்கப்பட்டது. உடன் 38 வது வட்ட கழக செயலாளரும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் , மற்றும் சிறுபான்மை நல பிரிவு துணை அமைப்பாளர் எஸ்.பி.டி.ஷேக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எம்.விமலா, எஸ்.கிருஷ்ணன், எஸ்.கமருதீன், கே.சி. ராஜா, எஸ்.ராஜா, தயாளன், மோகன், சுதா, மணிகண்டன், கழகத் தோழர்கள் பொதுமக்கள் இருந்தனர்.

உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க. இளங்கோ மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தூத்துக்குடி, நவ. 9-

தி.மு.க. உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க. இளங்கோ (48) அவர்கள் 08.11.2025 அன்று மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகின்றோம்.

க.இளங்கோ அவர்கள் 2021ஆம் ஆண்டு முதல் 08.11.2025 வரை தி.மு.க. உடன்குடி ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். மறைந்த க. இளங்கோ அவர்களின்

தந்தையான மறைந்த கண்ணபிரான் அவர்கள் தி.மு.க. ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றி சிறப்பு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

க. இளங்கோ அவர்களின் உடல் 19/93 அம்மன் கோவில் தெரு, பரமன் குறிச்சி கஸ்பா, தூத்துக்குடி - 628 151 என்ற இல்லத்தில் வைக்கப்பட்டு கழகத்தினர் மற்றும் பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

க. இளங்கோ அவர்களுக்கு இ.ரூபா என்ற மனைவியும், இ. பிரதிவ் கண்ணா (10), இ. பிரதிப் கண்ணா (4) என்ற இரு குழந்தைகளும் உள்ளனர்.

இவரது உடலடக்கம் இன்று (09.11.2025) காலை 9 மணிக்கு பரமன் குறிச்சியில் நடைபெறுகிறது.